Episode 2

2 Sep 2023



# REMINISCENCES WITH OUR BELOVED SADGURU SRI SRI ANNA

- Sri Swamiji

I was standing after having darshan of Sri Sri Anna. He asked me to sit beside Him. He then began speaking about magazines and periodicals which take spiritual message to the masses.

Sri Sri Anna said, "Around 30-40 years back a reporter representing a spiritual magazine came to interview me. He expressed his desire to ask me some questions. I agreed. 'It is said in Mahabharata that Draupadi was married to five men. Does our Sanathana Dharma permit a woman to indulge in polygamy?',he asked. I asked him if he had read the entire Mahabharata. He said he has browsed through vaguely. I asked him if he knew how Draupadi was born. I told him that Draupadi was born out of the sacrificial fire offered by her father. Her birth was not like that of a normal woman. If a woman takes birth from the sacrificial fire the way Draupadi did, then she can marry any number of times! I said".

"He then asked me, 'Gopis did bhakti to Krishna, completely forgetting their spouse, parents, children, siblings, and their household chores. How is this correct?' I replied, "They did Bhakthi not knowing that people like you would raise such questions in future. Poor Gopis, please let them be! He did not ask me any further questions."



# REMINISCENCES WITH OUR BELOVED SADGURU SRI SRI ANNA

- ஸ்ரீ ஸ்வாமிஜி

ஸ்ரீஸ்ரீ அண்ணாவை தரிசனம் செய்துவிட்டு நின்றேன். அவர் அருகில் அமர சொன்னார், நானும் அமர்ந்துகொண்டேன். அப்பொழுது பேச்சு ஆன்மிக விஷயங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லும் பத்திரிக்கைகளைப் பற்றியதாக இருந்தது.

ஸ்ரீஸ்ரீ அண்ணா என்னிடம், "ஒரு முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன் ஒரு ஆன்மிக பத்திரிக்கைக்கு பேட்டி எடுப்பதற்காக ஒருவர் சென்னையில் என்னைப் பார்க்க வந்தார். 'உங்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும்', என்றார். நானும், 'என்ன கேள்வி?' என்றேன். 'மஹாபாரதத்தில் த்ரௌபதி ஐந்து புருஷர்களை மணந்துகொண்டாள் என்று வருகின்றதே, அப்படியானால் ஸநாதனமான மதம் ஒரு பெண், ஐந்து ஆண்களை திருமணம் செய்துகொள்வதை அனுமதிக்கின்றதா? என்றார். நான் அவரிடம் 'நீங்கள் மஹாபாரதம் முழுவதும் படித்திருக்கின்றீர்களா?' என்று கேட்டேன். அவர், 'ஏதோ ஒரு அளவு சுமாராக தெரியும்' என்றார். 'த்ரௌபதி எப்படி பிறந்தாள் என்று தெரியுமா?' என்று கேட்டேன். 'த்ரௌபதி அவர் தந்தை செய்த வேள்வி தீயிலிருந்து தோன்றினார். சாமான்யமான பெண் போன்று பிறக்கவில்லை.
த்ரௌபதி போன்று எந்த பெண்ணாவது அக்னியிலிருந்து தோன்றினால் எவ்வளவு கல்யாணம் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம்!' என்று பதில் சொன்னேன்".

அடுத்ததாக, 'கோபிகைகள் கணவர், தாய், தந்தை, குழந்தைகள், சகோதரர், சகோதரி, வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் மறந்து க்ருஷ்ணபக்தி செய்தார்களே! அது எப்படி சரியாகும்?' என்றார்.."பிற்காலத்தில் நீங்கள் எல்லாம் வந்து இப்படி எல்லாம் கேள்வி கேட்பீர்கள் என்று தெரியாமல் அவர்கள் பக்தி செய்துவிட்டார்கள். அவர்கள் பாவம்! அவர்களை விட்டுவிடுங்கள்" என்றேன். அதற்குப் பிறகு அவர்கள் வேறு ஒரு கேள்வியும் கேட்கவில்லை", என்று சொல்லி முடித்தார்.